**கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் கட்டம் - III செயற்திட்டம் - 2018**

---

கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் கட்டம் III செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2014 செப்தெம்பர் 16 ஆம் திகதிய (309) ஆம் மொத்த இலக்க பிபீசீ (2014) 15 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்த்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போதய வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. கொழும்பு நகரப் பிரதேசத்தில் வாகன நெரிசலைக் குறைப்பதற்காக தெற்கு அதிவேகப் பாதையினையும் கொழும்பிலிருந்து ஆரம்பிக்கின்ற ஏனைய தேசிய வீதிகளையும் இணைகின்ற வகையில் கொழும்பிற்கு வெளிச் சுற்றுவட்டத்தில் அதிவேகப் பாதைகளை நிர்மாணித்தல் மற்றும் நாட்டின் ஏனைய பிராந்தியங்களுடன் இணைப்பினை மேம்படுத்துதல் அதன்மூலம், இலங்கையில் பிராந்தியங்களுக்கிடையே பொருளாதார அபிவிருத்தியை வலுப்படுத்துவதற்கு பங்களித்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 76,200 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 590 மில்லியனாக உள்ளதுடன், அதில் ரூபா 63,356 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 494 மில்லியனை நிதியளிப்புச் செய்வதற்கு சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி இணங்கியிருந்தது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளை 2014 ஆகஸ்ட் இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 யூன் மாதமளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

## 1.3 அபிப்பிராயம்

---

செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான

சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலையின் கட்டம் III இன் கீழான கடவத்த தொடக்கம் கெரவலப்பிட்டி வரையான நெடுஞ்சாலையின் 9.63 கிலோமீற்றர்களின் நிர்மானத்திற்கான ஒப்பந்தமானது வேண்டப்படாத அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட வெளிநாட்டு கம்பனி ஒன்றிற்கு ரூபா 66,690 மில்லியன் கிரயத்தில் 2013 பெப்ரவரி 21 இல் வழங்கப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்பக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| ஒப்பந்ததாரர் 2014 ஓகஸ்ட் இல் வேலையை ஆரம்பித்து இருப்பினும், தொடர்புடைய நிர்மான நடவடிக்கைகள் வேலைப்பரப்பில் செய்யப்பட்ட அடுத்தடுத்த மாற்றங்கள் காரணமாக 2016 சனவரி 01 இலேயே ஆரம்பிக்கப்பட்டிருந்தது.<br>மேலும், நெடுஞ்சாலையின் நிர்மான வேலைகள் 2019 ஜுன் 13 இல் பூர்த்தியாக்க எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்த காலப்பகுதியானது பௌதீக வேலைகளின் மந்தகதியான செயலாற்றல் மற்றும் உரிய இடங்களில் தளங்களை கையளிப்பதில் தாமதம் போன்ற காரணங்களால் 2019 திசெம்பர் 10 வரை நீடிக்கப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிர்மான வேலைகளின் ஒட்டுமொத்த செயலாற்றலானது உரிய திகதியில் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் 92.81 சதவீதத்திற்கு எதிராக 84.14 சதவீதமாகவே காணப்பட்டது. | செயற்திட்டத்தின் கிரயத்தில் அதிகரிப்பிற்கான சாத்தியம். | செயற்திட்டத்தின் காலப்பகுதியானது ஒப்பந்ததரரரிற்கு தளத்தினை கையளிப்பதில் காணப்பட்ட தாமதம் காரணமாக 2019 திசெம்பர் 10 வரை நீடிக்கப்பட்டிருந்தது. | மேலதிக கிரயங்களை குறைக்க முயற்சிகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 2.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | ஆலோசனை சேவைகளுக்கான ஒப்பந்த உடன்படிக்கையின் உப பிரிவு 6.5(அ) வின் பிரிவு 3 இன் பிரகாரம், ஆலோசகரிற்கு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 474,579.60 மற்றும் ரூபா 96.36 மில்லியன் தொகையான முற்பணங்கள் 30 சமமானான மதாந்த தவணைகளில் மீளப்பெறப்பட வேண்டியதுடன் 2017 மே 31 அளவில் பூர்த்தியடைகின்றது. இருப்பினும், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐ.அ.டொலர் 458,123.13 மற்றும் ரூபா 93.01 மில்லியன் மாத்திரமே மீளப்பெறப்பட்டிருந்தது. | மிகுதி முற்பணமானது ஒப்பந்த காலப்பகுதி முடிவில் மீளப்பெறப்படாததாக இருக்கக்கூடும். | முறையாக கருத்துரைத்திருக்கவில்லை. | ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளுடன் உடன்படல் வேண்டும். |
| (ஆ) | கடன் உடன்படிக்கைளானது 2014 செப்டம்பர் 16 இல் கையொப்பமிடப்பட்டிருப்பினும், கடனின் கிடைத்த தொகையின் ஆரம்ப கட்டணங்கள் 2015 திசெம்பர் 31 இலேயே செய்யப்பட்டிருந்தது. அதன் பெறுபேறாக, ரூபா 91.63 மில்லியன் தொகையான ஒப்படைப்பு கட்டணங்கள் செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும், ரூபா 86 மில்லியன் தொகையான வட்டி ஒப்பந்ததாரரினால் மேற்கொள்ளப்பட்ட பெறுவனவுகளின் தீர்ப்பனவில் காணப்பட்ட தாமதம் காரணமாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கடனின் கிடைத்த தொகையின் ஒதுக்கீடுகள் உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படாமல் இருக்கக்கூடும். | கருத்துரைத்திருக்கவில்லை. | செயற்திட்டத்தின் நிதித்திட்டத்துடன் ஏற்புடையதாயிருத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | கெரவலப்பிட்டியிலுள்ள இடமாறலின் ஒரு பகுதியின் நிர்மானம் மற்றும் ஆரம்ப அளவைப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்த உட்புறமான 04 பாதைகள் போன்றவற்றின் மீதான ரூபா 10,775 மில்லியன் கிரயத்தில் மதிப்பிடப்பட்ட வேலைகள் பின்னர் ரத்து செய்யப்பட்டிருந்ததுடன் கடவத்தவிலுள்ள ஆரம்ப முனையிலுள்ள இடமாற்றலின் நிர்மானத்தின் புதிய வேலைகள் மற்றும் வயடாக்ட் இன் நிர்மானம் என்பன மீளப்பெறப்பட்ட வேலைகள் மீதான கிரயங்களை எதிரீடு செய்ய அறிமுகப்படுத்தப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. மேலும், அளவைப்பட்டியலின் பிரகாரம் ரூபா 2,967.012 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் செய்து முடிக்க வேண்டிய பூர்வாங்கல்கள், புவியியல் வேலைகள் மற்றும் ஏனைய சிவில் நிர்மான வேலைகளின் கீழான 133 உருப்படிகளின் கீழான வேலைகள் கூட ஒப்பந்ததாரரினால் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏழ்மையான ஒப்பந்த நிர்வாகம் மற்றும் நிர்மான திட்டமிடல். | அது அளவைப்பட்டியலின் எல்லா உருப்படிகளிற்காகவும் கவனிக்கப்பட வேண்டிய தேவையில்லை. மேலும், சில தேவையான உருப்படிகளினை கவனிப்பதற்காக ஒப்பந்ததாரரிடம் தாமதங்கள் காணப்பட்டன. | வேலைப்பரப்பின் உரிய மாற்றங்கள் விபரமான வடிவமைப்புக்களை தயாரிக்கும் நேரத்தில் குறைத்திருக்க வேண்டும். |
| (ஈ) | நெடுஞ்சாலைக்கான ஒரு பறிமாற்றலினை நிர்மானிப்பதற்காக 2017 மற்றும் 2018 இல் ரூபா 22.31 மில்லியன் கிரயத்தில் மத்துமகல பகுதியிள் கொள்வனவு செய்யப்பட்ட 27.02 ஹெக்டார் காணி கடுவல பகுதியில் உரிய பறிமாற்றலினை நிர்மானிப்பதற்கான வேலைப்பரப்பில் மாற்றம் செய்யப்பட்டதன் பெறுபேறாக பயன்படுத்தாது காணப்பட்டது. | வெளிநபர்களினால் காணிகளில் அத்துமீறலிற்கான சாத்தியம். | ஏ3 வீதிக்கான ஒரு நுழைவு மற்றும் வெளியேறலை நிர்மானிப்பதற்கான யோசனை ஏ3 வீதியிலிருந்து 900 மீற்றர்களிற்கு அப்பால் பக்கத்தில் ஹெரவலபிட்டியவிலிருந்து மற்றுமொரு இடமாற்றல் இருப்பதன் காரணமாக கைவிடப்பட்டிருந்தது. இருப்பினும் ஏ3 வீதிக்க அடுத்தடுத்து கொள்வனவு செய்யப்பட்ட காணி எதிர்காலத்தில் | காணியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் தாமதமில்லாமல் அதனை பயன்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேணடும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பலனலிக்கும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும். | |
| (உ) | வீட்டுச்சேதங்கள், வீடுகளில் மண் அரிப்பு மற்றும் சேரு படிவு, கால்வாய்களை நிலைதிரும்பல் மற்றும் காணிகளை முறையாக அணுகுவதில் குறைபாடு போன்ற காரணங்கள் காரணமாக பாதிக்கப்பட்ட தரப்பினர்களிடமிருந்து 401 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. இருப்பினும், கிடைக்கப்பெற்ற மொத்த முறைப்பாடுகளில், 2019 செப்தம்பர் 31 இல் உள்ளவாறு 269 முறைப்பாடுகள் மாத்திரமே ஒப்பந்தாரரினால் நீடிக்கப்பட்டிருந்தன. | சரியான நேரத்தில் சரியான முறையில் சமூக பிரச்சினைகளை வெளிப்படுத்தலில் தாமதம் காரணமாக இழப்பீடு மீதான கிரயத்தில் அதிகரிப்பிற்கான சாத்தியம். | 600 எழுத்துவடிவிலான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் அதில் 331 முறைப்பாடுகள் தீர்க்கப்படாமல் காணப்பட்டன. ஆனைத்து முறைப்பாடுகளையும் தீர்க்கும் வரை செயற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. | ஒப்பந்தம் முடிவுறுத்துவதற்கும் காப்புறுதி பெட்டகை காலாவதியாவதற்கும் முன்னர் சேதமடைந்த ஆதனங்களின் திருத்தங்கள் மீதான விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். |

**2.3 காணி சுவீகரிப்பு மற்றும் மீள வழங்கள் மீதான விடயங்கள்**

| | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், வத்தள மற்றும் மகர பிரதேச செயலகத்தின் கண்ணோட்டத்தின் கீழுள்ளதான 296 அரச காணித்துண்டுகள் உள்ளடங்களாக 1,561 காணித்துண்டுகள் நிர்மான நோக்கத்திற்காக செயற்திட்டத்தினால் சுவீகரிக்கப்பட்டிருந்ததுடன் 2018 | இலங்கை அரசாங்கத்திற்கு மேலதிக செலவுகள். | உரிய நேரத்தில் கொடுப்பனவுகளை செய்வதற்கு முன்பணங்களின் போதாமையின் காரணமாக பிரிவு 38(அ) வர்த்தமானி திகதியிலிருந்த கொடுப்பனவு திகதிவரை சட்டரீதியான மதிப்பீட்டிற்காக வட்டி செலுத்தப்பட வேண்டியிருந்தது. 292 துண்டுகளிற்கு மாத்திரம் | காணிசுவீகரிப்பு நடைவடிக்கைகள் அதன் எதிர்பார்க்கப்பட்ட திகதியில் பூர்த்திசெய்ய முறையான திட்டமிடப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,794.14 மில்லியன் பெறுமதியான இழப்பீடும் அதன் மீது செலுத்தப்பட்டிருந்தது. மேலும், இழப்பீட்டு கொடுப்பனவு செய்வதனை தீர்ப்பதில் காணப்பட்ட தாமதம் காரணமாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தினால் ரூபா 1,094 மில்லியன் தொகையான வட்டி செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் 292 காணித்துண்டுகளிற்கான உரிமைத்துவம் மாத்திரமே வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றப்பட்டிருந்தது. | | பிரிவு 44 விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் செயற்பாடுகள் செயன்முறையில் காணப்பட்டது. | |
| (ஆ) | வத்தள பிரதேச செயலக பகுதியிலுள்ள 2.63 ஹெக்டரின் மில்லகாவத்த என அழைக்கப்படும் காணி ரூபா 34 மில்லியன் கிரயத்தில் மீளவளங்கள் நோக்கத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் மேலும், மொத்தமாக ரூபா 48.37 மில்லியன் அபிவிருத்தி நோக்கத்திற்காக ஏற்பட்டுமிருந்தது. செயற்திட்டமானது 57 குடும்பங்களிற்கு மீள்வழங்க எதிர்பார்த்திருந்த போதிலும், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 34 குடும்பங்கள் மாத்திரமே மீளமர்த்தப்பட்டிருந்தன. | ஆக்கிரமிக்கப்படாத காணித்துண்டுகளில் அத்துமீறுவதற்கான சாத்தியம். | காணித் துண்டுகளின் மீதி வத்தள பகுதியிலுள்ள பாதிக்கப்பட்ட மக்களிற்கு பகிர்ந்தளிக்கப்படும். | மிகுதி காணித்துண்டுகளை பாதிக்கப்பட்ட மக்களிற்கு கொடுத்துத்தீர்க்கும் வரை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | செயற்திட்டமானது ரூபா 96.19 மில்லியன் கிரயத்தில் 2014 பெறுகை செய்யப்பட்ட 2.43 ஹெக்டாரிலுள்ள ஐயசுமனவத்த காணியில் மீளமர்த்தப்பட்ட 07 குடும்பங்களிற்கு பதிலாக 36 குடும்பங்களிடமிருந்து காணித்துண்டுகளிற்கான கிரயத்தினை பெற்றுக்கொள்வதற்கு | உரிய நோக்கங்கள் அடையப்படாமல் இருக்கக்கூடும். | ஐயசுமனவத்த மீள்வழங்கள் காணி 02 கட்டங்களாக பிர்க்கப்பட்டிருந்தன. கட்டம் I இல் 36 காணித்துண்டுகள் காணப்படவதுடன் 08 பொது மக்கள் கொடுப்பனவை செய்திருந்தனர். கட்டம் II இலுள்ள அனைத்து 58 காணிதுண்டுகளும் கரவலப்பிட்டியிலுள்ள | மிகுதி காணி துண்டுகளிற்கான உரிமைத்துவமானது செயற்திட்டம் பூர்த்தியாகும் நேரத்தில் வீதி அபிவிரத்தி அதிகார சபைக்கு மாற்றப்படல் வேண்டும். |

நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், செயற்திட்டமானது ஆக்கிரமிப்பாளர்கள் ஆக்கிரமிப்பதற்காக 58 காணித்துண்டுகளை ஒதுக்க உடன்பட்டிருந்ததுடன் அதில் 33 குடும்பங்கள் மாத்திரமே 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீளமர்த்தப்பட்டிருந்தனர்.

குடும்பங்களிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 வரை கொடுத்து தீர்க்கப்படவில்லை.